**பிரதேச அபிவிருத்தி வங்கி - 2019**

## 1.1 அபிப்பிராயம்

பிரதேச அபிவிருத்தி வங்கியின் (“வங்கி”) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டதின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. இக் கணக்காய்வை மேற்கொள்வதற்கு பொதுத் தொழிலிலுள்ள பட்டயக் கணக்காளர்கள் நிறுவகமொன்று எனக்கு உதவியது.

வங்கியின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன்.
அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### முக்கியமான கணக்காய்வு விடயங்கள்

நடைமுறை காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்களின் எனது கணக்காய்வில் அதிகளவு முக்கியத்துவம் வாய்ந்தவைகளாக காணப்பட்டவைகள் எனது உயர்தொழில் தீர்வுகளுக்குட்பட்ட விடயங்களாக காணப்படுகின்றதுடன், முக்கியமான கணக்காய்வு விடயங்களாகவும் காணப்படுகின்றது. நிதிக்கூற்றுக்களின் எனது கணக்காய்வின் உள்ளடக்கங்களில் குறிப்பிடப்பட்ட அந்த விடயங்கள் முழுமையானதொன்றாகக் காணப்படுகின்றதுடன் அதன் மீது எனது கணக்காய்வு அபிப்பிராயத்தினை தாபிக்கையில் அந்த விடயங்களின் மீது தனியானதொரு அபிப்பிராயமொன்றையும் நான் வழங்கவில்லை. கீழே உள்ள ஒவ்வொரு விடயத்திற்கும் கணக்காய்வு விடயம் எனது கணக்காய்வில் எவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது என்பது பற்றிய எனது விளக்கம் அமைப்பில் வழங்கப்படுகின்றது.

| முக்கியமான கணக்காய்வு விடயம் | முக்கியமான கணக்காய்வு விடயம் எனது கணக்காய்வில் எவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது |
|---|---|
| ஏனைய வாடிக்கையாளர்களிடம் இருந்தான கடன்கள் மற்றும் பெற வேண்டியவைகளுக்கான நட்டக்கழிவு படி<br>ஏனைய வாடிக்கையாளர்களிடம் இருந்தான கடன்கள் மற்றும் பெற | நட்டக்கழிவு கட்டணங்களின் நியமத்தன்மையை மதிப்பிடுவதற்கு எனது கணக்காய்வு நடைமுறைகள் (ஏனையவற்றுக்கிடையே) பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளது.<br>• கணக்காய்வு குழுச் சபை மற்றும் முகாமைத்துவத்தினால் நட்டக்கழிவு |

வேண்டியவைகளுக்கான நட்டக்கழிவு படி முக்கிய கணக்காய்வு விடயமொன்றாக கருதப்படுகின்றது. கடன்கள் மற்றும் பெற வேண்டியவைகளுக்காக (மற்றும் அவற்றின் நட்டக்கழிவு படி) அறிக்கையிடப்பட்ட தொகைகளின் பொருண்மைத்தன்மை, இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9: நிதிசார் கருவிகள் (எஸ்எல்எப்ஆர்எஸ் 9) இற்கு ஆதரவளித்துள்ள முகாமைத்துவத்தின் நட்ட மதிப்பீடுகளுடன் தொடர்புடைய உள்ளடக்கங்கள் மற்றும் மாற்றுதல்கள் முக்கிய கணக்காய்வு விடயமொன்றாக அதனை கருத்திற்கொள்வதற்கு எனது அடிப்படையாகக் காணப்படுகின்றது.

2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான, வங்கியின் அதன் மொத்தச் சொத்துக்களின் 68 சதவீதம், ரூபா. 136,206 மில்லியன் தொகையான ஏனைய வாடிக்கையாளர்களிடம் இருந்தான கடன்கள் மற்றும் பெற வேண்டியவைகளையும் (குறிப்பு - 20) தேறிய நட்டக்கழிவு கட்டணம் ரூபா. 7,667 மில்லியனையும் உள்ளடக்கியிருந்தது.

அவ்வாறான கணிப்பீடுகளில் முகாமைத்துவத்தினால் பயன்படுத்தப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள், நட்டக்கழிவு படிக்கான அதன் உணர்திறன் மற்றும் அடிப்படை குறிப்பு 3.1.1.7 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட எடுகோள்கள் மற்றும் மதிப்பீடுகள், குறிப்பிடப்பட்ட தீர்ப்புக்களின் ஒப்புதல்கள் மற்றும் மீளாய்வு மற்றும் அங்கீகார மட்ட மதிப்பீட்டினை உள்ளடக்கியிருந்த, கடன்கள் மற்றும் முற்பணங்களின் நட்டக்கழிவின் மதிப்பீட்டின் மீதான கட்டுப்பாடுகளின் வடிவமைப்பு மற்றும் விளைத்திறமைகளினை நான் மதிப்பிட்டிருந்தேன்.

- அடிப்படை கணிப்பீடுகள் மற்றும் தரவினை நான் மாதிரி பரீட்சித்தேன்.
- மேற்குறிப்பிட்டதற்கும் மேலதிகமாக, பின்வரும் முக்கிய நடைமுறைகள் செயற்படுத்தப்பட்டன.

மாதிரி கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கான நட்டக்கழிவிற்கான தனிப்பட்ட மதிப்பீடு.

- நட்டக்கழிவு நிகழ்வொன்று ஏற்பட்டுள்ளதா என்பதை தீர்மானிப்பதற்கு முகாமைத்துவத்தினால் பயன்படுத்தப்பட்ட பிரதான கட்டளை விதிகளினை நான் மதிப்பிட்டேன்.

- நட்டக்கழிவு குறிகாட்டிகள் காணப்படுமிடத்து, மாதிரி அடிப்படையில் எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால காசு பாய்ச்சல்கள், கழிவீட்டு விகிதங்கள் மற்றும் கட்டுப்பாட்டிலுள்ள துணை மதிப்பீடு உள்ளடங்களாக முகாமைத்துவத்தின் மதிப்பிடப்பட்ட எதிர்கால அறவிடுகைகளின் நியாயத்தன்மையினை நான் மதிப்பிட்டேன், மேலும் எதிர்கால அறவிடுகைகளின் மதிப்பிடப்பட்ட முன்னைய தொகைகளுக்கு எதிராக உள்ளபடியான அறவிடுகைகளினை நான் ஒப்பிட்டேன்.

கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கான நட்டக்கழிவிற்கான கூட்டு மதிப்பீடு.

- மூல ஆவணங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப முறைமைகளிலுள்ள தகவல் மற்றும் மீள் செயற்படுத்தப்பட்ட கணிப்பீடுகளுக்கான விபரங்களினை இணங்குவதன் மூலம் அடிப்படை தகவலின் முழுமையானதன்மை, மற்றும் துல்லியத்தன்மையினை நான் சரிபார்த்தேன்.

- கடன் பொதிகளின் பல்வேறு வகை மீது அவர்களின் தீர்ப்புக்களில்

முகாமைத்துவத்தினால், அவற்றுடன் பகிரங்கமாகக் கிடைக்கக்கூடிய தரவு மற்றும் தகவல் மூலங்களுடன் ஒப்பிடுவதன் மூலம் பயன்படுத்தப்பட்ட பெரும்பாக பொருளியல் மற்றும் ஏனைய காரணிகளின் நியாயத்தன்மையை கூட நான் கருத்திற்கொண்டேன்.

- 3.1.1.7, 14,20 மற்றும் 46 ஆம் குறிப்பில் ஸ்தாபிக்கப்பட்டவாறு வெளிப்படுத்தப்பட்ட தொடர்புடைய நிதிக்கூற்றுக்களின் போதுமானதன்மையினை நான் மதிப்பிட்டேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

---

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, வங்கி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது வங்கியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

வங்கியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் வங்கியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு வங்கி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ

செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு வங்கிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- வங்கியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள்,

புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- வங்கியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் வங்கி இணங்கியிருந்ததா என்பதும்,

- வங்கி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வங்கியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | நிதி திணைக்களத்திற்கான புதுப்பிக்கப்பட்ட கையேடு கிடைக்காமை, நிதி அறிக்கைகளுக்கான தகவல்களை பற்றிய முறையான ஆவணப்படுத்தப்பட்ட கொள்கையின் பற்றாக்குறை, நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதில் விரிவான கையேட்டு செய்முறை, எஸ்எல்எப்ஆர்எஸ் இனை ஏற்றுக்கொள்வதனால் எழும் மேலதிகமான கணிப்பீடுகளுக்கான ஒரு முறைமைத் தீர்வுக்கான தேவை, ஜிஎல் கணக்குகள் மற்றும் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வெளிப்பாடுகள் மற்றும் ஜிஎல் உடன் சரிசெய்யப்படாமல் நிதிக்கூற்றுக்களில் நேரடியாக வெளிப்படுத்தப்பட்ட பதிவுகள்<br><br>வங்கியின் நிதிக்கூற்றுக்களின் மூடல் செயன்முறை தொடர்பாக அவதானிக்கப்பட்டது. | நிதி அறிக்கையிடல் சூழலில் அடிக்கடி ஏற்படும் மாற்றங்களைக் கருத்தில் கொள்கையில், சாத்தியமான எல்லா சூழ்நிலைகளுக்குமான புதுப்பிக்கப்பட்ட கொள்கை கையேட்டை உருவாக்குவது நடைமுறைக்கு மாறானது. அதற்கு பதிலாக, வழமையான முன்னேற்றங்களுக்கான முறைகள் கிடைக்கக்கூடியதாக இருக்கின்றது. கோர் வங்கி முறைமையின் சில வரையறைகள் காரணமாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதில் விரிவான கையேட்டு செய்முறை தவிர்க்க முடியாததாக<br><br>தற்போது இருக்கின்றது. 276 கிளைகளின் அதிகாரிகள் ஜிஎல் கணக்குகளுக்கு பதிவுகளை அனுப்புவதால் ஜிஎல் கணக்குகளுக்கான உரிமையாளர்களின் பட்டியலை உருவாக்குவது நடைமுறைக்கு சாத்தியமற்றதாக இருக்கின்றது. கோர் வங்கி முறைமையில் உள்ள வரையறைகள் காரணமாக திகதி மாற்றிய பதிவுகள் அனுப்புவது | வங்கியின் நிதி அறிக்கைகளின் மூடல் செயன்முறையை பலப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும். |

| | | |
|---|---|---|
| | சாத்தியமில்லை என்பதால் நிதிக்கூற்றுக்களில் சரிபார்த்தல் செய்யப்படுகின்றது மற்றும் ஜிஎல் இல் ஒருங்கிணைப்பு பின்னர் செய்யப்படுகின்றது. எவ்வாறாயினும், எதிர்கால திருத்தங்களுக்கு அவசியமானதாக குறிப்பிடப்படும் குறைபாடுகள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. | |
| (ii) சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஆவணப்படுத்தப்பட்ட நட்டக்கழிவு கொள்கை கிடைக்காமை, மத்திய பொறுப்பு அறிக்கை கிடைக்காமை, தனிநபர் குறிப்பிடத்தக்க கடன் வேலைகளில் மீளாய்வு செய்முறை இன்மை மற்றும் நட்டக்கழிவு கணிப்பீடடில் மேலும் முன்னேற்றம் அவதானிக்கப்பட்டன. | ஒரு நட்டக்கழிவு கொள்கையினை அபிவிருத்தி செய்வது இந்த ஆண்டு இறுதிக்குள் செய்யப்படும். மத்திய பொறுப்பு அறிக்கை ஐடி பிரிவால் அபிவிருத்தி செய்யப்பட்டது மற்றும் எம்ஐஎஸ் தொகுதியில் கிடைக்கின்றது. தனிநபர் குறிப்பிடத்தக்க கடன்களின் மீளாய்வு செய்முறைக்கான பொறுப்பு கிளை அதிகாரிகளுக்கு மற்றும் மேலதிகாரிகளுக்கு வழங்கப்படுகின்றது. மேலும் பெறுபேறுகள் ஆண்டு தோறும்<br><br>உள்ளக கணக்காளர்களால் மீளாய்வு செய்யப்படுகின்றன. | நட்டக்கழிவு கணிப்பீட்டில் மேலும் தேவைப்படும் மேம்பாடுகளுக்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும். |

**1.5.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது ஏடுகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தொங்கல் ஜிஎல் இல் 240100105 வங்கியின் கிளைகளுக்கு இடையேயான கொடுக்கல் வாங்கல்கள் பிரதிபலிக்கின்றது மற்றும் கால முடிவில் இந்த மீதிகள் இரத்துச் செய்யப்பட வேண்டும். எனினும், இணக்கம் செய்யப்படாத மீதிகள் ரூபா. 2,299,910 நிதிக்கூற்றுக்களில் ஏனைய சொத்துக்களின் கீழ் அவதானிக்கப்பட்டது. | எதிர்கால இணக்கத்திற்காக குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும், இது போன்ற கொடுக்கல் வாங்கல்களின் தன்மை காரணமாக மாத இறுதியில் மீதி இன்மையை பாராமரிப்பது நடைமுறைக்கு சாத்தியமற்றது. | இந்த தொங்கல் கணக்குகளை இணக்கம் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வங்கியின் மொத்த என்பிஎல் விகிதம் 2016 ஆம் ஆண்டில் 2.85 சதவீதத்திலிருந்து 2019 ஆம் ஆண்டில் 9.6 சதவீதமாக தொடர்ச்சியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், உரிமம் பெற்ற சிறப்பு வங்கிகள் மற்றும் வங்கித்துறையின் சராசரி என்பிஎல் 2019 திசெம்பர் 31 இல் முறையே 5.5 சதவீதம் மற்றும் 4.7 சதவீதமாக இருந்தது. | 2019 இல் செயற்படா கடன்களை குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இருப்பினும், ஈஸ்டர் ஞாயிறு வெடிகுண்டு தாக்குதல் போன்ற வெளிப்புற காரணிகளால் பாதீட்டு இலக்குகள் அடையப்படவில்லை. | இலங்கை மத்திய வங்கியின் நெறிப்படுத்தல்களை கடைப்பிடித்து எந்த தாமதமும் இன்றி செயற்படா கடன்களை மீட்க தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| பெறுகை வழிகாட்டி குறிப்பு 2.1.1 மற்றும் பொது நிதி சுற்றறிக்கை பிஎப்/429(i) | பொதுநிதி பணிப்பாளர் நாயகம் அவர்களின் அனுமதியை பெறாமல் வங்கி தனது சொந்தமாக விருத்தி செய்த கைநூலை பயன்படுத்தியுள்ளது. | 2006 ஆம் ஆண்டின் அரசாங்க பெறுகை வழிகாட்டி பிரிவு 2.1.1 இன் பிரகாரம் தேசிய பெறுகை ஆணைக்குழுவிற்கு செயலாளர், அரசாங்க தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சின் ஊடாக 27 ஏப்ரல் 2016 அன்று வங்கியால் கோரிக்கை செய்யப்பட்டுள்ளது. 27 ஒக்டோபர் 2018 வரை வங்கியானது அரசாங்க தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழ் செயற்பட்டு வந்ததுடன் அனுமதியானது தேசிய பெறுகை ஆணைக்குழுவின் செயலாளர் நாயகத்திடம் அரசாங்க தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளரினால் கோரப்பட்டது. | மேற்கோள் காட்டப்பட்ட வழிகாட்டுதலை பின்பற்ற தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும். |

### 1.8 வரிப் பிரமாணங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் பிரிவு 114 மற்றும் 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் பிரிவு 83, (01.04.2018 முதல் நடைமுறைக்கு வந்தது) 31 ஜனவரி 2000 ஆம் திகதிய பொது நிதி சுற்றறிக்கை இல பிஎப்/பிஈ/06 மற்றும் 29 ஏப்ரல் 2016 திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை இல பிஈடி 03/2016 இற்கு முரணாக வங்கியானது 2019 ஆம் ஆண்டிற்கான ரூபா. 140,099,752 தொகையான உழைக்கும் போது செலுத்தும் வரியினை (பிஏவைஈ) அதன் ஊழியர்களின் சார்பாக அந்தந்த ஊழியர்களின் சம்பளத்திலிருந்து கழிப்பதற்கு பதிலாக தனது சொந்த நிதியிலிருந்து செலுத்தியுள்ளது. மேலும் பிஈடி சுற்றறிக்கை இல பிஈடி 03/2016 இற்கு இணங்க பிஏவைஈ வரியினை ஊழியர்களின் உழைப்பிலிருந்து கழிக்கும் படி சட்டமா அதிபர் அபிப்பிராயம் தெரிவித்திருந்தார். | இலங்கை வங்கி ஊழியர்கள் ஒன்றியத்துடனான கூட்டு உடன்பாட்டின் ஏற்பாட்டின் கீழ் வங்கியானது ஊழியர்களின் பிஏவைஈ வரி பொறுப்பினை ஏனைய அரசுக்கு சொந்தமான வங்கிகளின் நடைமுறையினை போல செலுத்தியிருந்தது. மேலும் இந் நடைமுறை உள்நாட்டு இறைவரி சட்டத்தினால் தடைசெய்யப் பட்டிருக்கவில்லை மற்றும் 2008 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க ஆர்டிபி சட்டத்தில் இது தொடர்பாக சில ஏற்பாடுகள் உள்ளன. | மேற்கோள் காட்டப்பட்ட வழிகாட்டுதலை பின்பற்ற தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா. 1,222,160,409 தொகையான இலாபம் ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா. 2,103,081,891 தொகையானதால் நிதி விளைவுகளில் ரூபா. 880,921,482 அல்லது 41.8 சதவீதம் வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. அதிகரித்த வட்டி செலவினம் மற்றும் நட்டக்கழிவு கட்டணங்கள் என்பன வீழ்ச்சிக்கான பிரதான காரணங்களாகும்.

## 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் போக்கு பகுப்பாய்வு

மீளாய்வாண்டு காலப்பகுதியில் வங்கியின் பிரதான வருமானம் மற்றும் செலவு விடயங்களின் பகுப்பாய்வு இதற்கு நெரொத்த முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்து கீழே காட்டப்படுகின்றன.

| விபரம் | வேறுபாடுகள் (அதிகரிப்பு / குறைவு) (ரூபா. மில்லியன்) | வேறுபாடுகள் சதவீதம் | வேறுபாட்டிற்கான காரணங்கள் |
|---|---|---|---|
| கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதான வட்டி வருமானம் | 719 | 3.4 | 5 சதவீதத்தினால் மொத்த கடன்கள் மற்றும் பெற வேண்டியவைகளுடைய அதிகரிப்பு |
| வங்கிகளுடன் வேலைவாய்ப்பு மீதான வட்டி வருமானம் | 240.9 | 48.7 | லங்கா புத்திர அபிவிருத்தி வங்கியுடனான இணைப்புடன் வங்கிகளுடன் வேலைவாய்ப்பு ரூபா. 6,350 மில்லியன் பெறப்பட்டுள்ளது |
| வட்டி செலவினம் | 944.3 | 7.3 | வங்கிகள் மற்றும் வாடிக்கையாளர் வைப்புக்கள் காரணமாக வட்டி செலவினம் முறையே 30.8 சதவீதம் மற்றும் 4.5 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது |
| நட்டக்கழிவுக் கட்டணம் | 998.9 | 70.9 | லங்கா புத்திர அபிவிருத்தி வங்கியின் செயற்பட்டா கடன்கள் மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கியின் செயற்பட்டா கடன்கள் அதிகரிப்பு |

## 2.3 விகிதப் பகுப்பாய்வு

கிடைக்கப்பெற்ற தகவல்களின் படி, வங்கியின் மீளாய்வாண்டிற்கான மற்றும் அதற்கு முன்னைய ஆண்டின் சில முக்கியமான கணக்கீட்டு விகிதங்கள் பின்வருமாறு

| | துறைசார் விகிதங்கள் (உரிமம் பெற்ற சிறப்பியல்வு வாய்ந்த வங்கிகள்) சதவீதம் | 2019 சதவீதம் | 2018 சதவீதம் |
|---|---|---|---|
| **<u>இலாப விகிதங்கள்</u>** | | | |
| தேறிய இலாப வீதம்(பிளரி) | 3.52 | 1.81 | 4.12 |
| தேறிய வட்டி எல்லை | 3.95 | 6.85 | 7.07 |
| வட்டி வருமானம் மீதான தேறிய வட்டி வருமானம் | 29.91 | 47.25 | 47.88 |
| மொத்த வருமானத்திற்கு வட்டி அல்லாத வருமானம் | 2.95 | 4.18 | 4.62 |
| வட்டி வருமானத்திற்கான வட்டி செலவு | 70.09 | 52.75 | 52.12 |
| செயற்பாட்டு செலவினங்களுக்கான ஊழியர் கிரயம் | 55.4 | 74.55 | 75.01 |
| சராசரி சொத்துக்கள் மீதான திரும்பல் (பிளரி) | 0.42 | 0.26 | 0.62 |
| உரிமை முதல் மீதான திரும்பல் | 6.80 | 3.33 | 7.30 |

| | | | |
|---|---|---|---|
| பங்கு ஒன்றின் உழைப்பு | | 0.91 | 2.76 |
| **<u>சொத்தக்களின் தரம்</u>** | | | |
| செயற்படா முற்பண விகிதம் | 5.5 | 9.6 | 5.4 |
| **<u>மூலதனத்தின் போதுமான தன்மை விகிதம்</u>** | **குறைந்த பட்ச தேவை** | | |
| பொதுவான உரிமையாண்மை அடுக்கு I மூலதன விகிதம் | 7 | 10.90 | 11.58 |
| மொத்த அடுக்கு I மூலதன விகிதம் | 8.5 | 10.90 | 11.58 |
| மொத்த மூலதன விகிதம் | 12.5 | 16.27 | 13.61 |
| **<u>திரவத்தன்மை விகிதங்கள்</u>** | | | |
| சட்ட ரீதியான திரவச் சொத்துக்கள் விகிதம் | 20 | 32.38 | 24.27 |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) ரிசல் கமர்சியல் வங்கியியல் கூட்டுத்தாபனம் மற்றும் அதன் நுண்பாக நிதி பிரிவு ரிசால் நுண்பாக வங்கியின் சிறந்த நடைமுறைகள் மற்றும் நிபுணத்துவத்தை வழங்குவதை இலக்காகக் கொண்ட பிலிப்பைன்ஸில் நடத்தப்பட்ட நுண்நிதி பாராட்டு பாடநெறி. வங்கியின் கடன் பிரிவில் உள்ள ஊழியர்களுக்கு மேலே உள்ள நிகழ்ச்சித்திட்டம் பொருந்தும். இருப்பினும், மேற்கூறிய நிகழ்ச்சித்திட்டத்திற்கு டிஜிஎம் (எச்ஆர்) தேர்ந்தெடுககப்பட்டது மற்றும் தேர்வு முறை கணக்காய்விற்கு கிடைக்கவில்லை. | இந்த நிகழ்ச்சித்திட்டம் ஒன்றரை நாள் நிகழ்ச்சித்திட்டமாக வடிவமைக்கப்பட்டுள்ளதால், நிர்வாக இயக்குநரை பரிந்துரைக்க மனித வளங்கள் மற்றும் ஊதிய குழு சபை தீர்மானித்தது மற்றும் நிர்வாக இயக்குநரின் பதவிக்காலம் நிறுத்தப்பட்டது. எனவே, இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு பரிந்துரைக்க எச்ஆர்டி மற்றும் நிர்வாகத் தலைவரை சிபாரிசு செய்தது. வங்கியின் நலனுக்காக வெளிநாட்டு வெளிப்பாடு வருகையை ஏற்பாடு செய்வதற்கான பொறுப்பு பிலிப்பைன்ஸில் உள்ள எபிஆர்எசிஎ மையத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட பயிற்சி பின்னுட்ட அமர்வில் கலந்து கொண்ட போது இந்த குறுகிய கால நிகழ்ச்சித்திட்டத்தில் எச்ஆர்டி மற்றும் நிர்வாகத் தலைவர் பங்கேற்றார் | நுண்பாக நிதி தொடர்பான பகுதிகளை உள்ளடக்குவதனை இந்த நிகழ்ச்சித்திட்டம் இலக்காக கொண்டுள்ளதனால், பயிற்சியிலிருந்து அதிகபட்ச நன்மையினைப் பெற கடன் பிரிவில் ஒரு உத்தியோகத்தரை வங்கி பரிந்துரைத்திருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | பிரதேச அபிவிருத்தி வங்கியின் தலைவர் நெதர்லாந்தில் உள்ள விவசாய மற்றும் கிராமிய நிதி மற்றும் விவசாய காப்புறுதியில் ஐரோப்பிய புத்துருவாக்கங்கள் எனும் சர்வதேச கல்வி சுற்றுலா நிகழ்ச்சித்திட்டத்தில் பங்கேற்றார். வங்கியில் தலைவரின் செயற்பாடானது நிர்வாகத்தில் முடிவெடுக்கும் திறனின்மை மற்றும் ஈடுபடும் காலம் வரையறுக்கப்பட்டு இருக்கின்றது. முன்னாள் தலைவர் கூட மேற்கூறிய நிகழ்ச்சித்திட்டத்தில் பங்கேற்றார் மற்றும் தற்போது அவர் சேவையில் இல்லை. எனவே, மேற்கூறிய நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து வங்கியானது நன்மையினைப் பெறுவது வரையறுக்கப்பட்டுள்ளது. | இந்த அழைப்பைப் பெற்ற போது ஜிஎம்/சிஈஓ தலைவரை பரிந்துரைத்து முன்மொழிந்தார் மற்றும் சபைக்கு ஆவணத்தை சமர்ப்பிக்க எச்ஆர்டி மற்றும் நிர்வாகத் தலைவருக்கு அறிவித்தார். அதன்பிறகு, இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்காக தலைவரை பரிந்துரைக்க சபை முடிவு செய்தது. தலைவர் 7 ஜீன் 2019 அன்று நடைபெற்ற சபை கூட்டத்தில் சபை இயக்குனர்கள் மற்றும் கூட்டு முகாமைத்துவம் மத்தியில் மேற்கூறிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்திற்கு மீளாய்வு/அறிக்கை பகிர்ந்தார். அதன்படி, வங்கியில் தலைவரின் செயற்பாடானது நிர்வாகத்தில் முடிவெடுக்கும் திறனின்மையை கொண்டிருந்தாலும், நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் பெறப்பட்ட அறிவானது வங்கியின் சபை இயக்குனர்கள் மற்றும் கூட்டு முகாமைத்துவத்துடன் பகிர்ந்து கொள்ளப்பட்டதுடன் அந்த நேரத்தில் செயல்படுத்தப்பட்ட நிறுவன இலங்கை நிகழ்ச்சித்திட்டத்தை வலுப்படுத்தவும் பயன்படுத்தப்பட்டது. | தலைவரின் செயற்பாடானது நிர்வாகத்தில் முடிவெடுக்கும் திறனின்மை மற்றும் ஈடுபடும் காலம் வரையறுக்கப்பட்டு இருக்கின்றமையால் குறித்த நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் பணத்தின் வினைத்திறனான பயன்பாட்டிற்காக பொருத்தமான ஊழியரை தெரிவு செய்ய தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும். |

### 3.2 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | தலைவர் 1 மே 2018 தொடக்கம் 31 ஆகஸ்ட் 2018 வரை பணியாற்றினார், அனுமதியளிக்கப்பட்ட வரையரைக்கு மேலதிகமாக 1358.10 லீட்டர் எரிபொருளை பயன்படுத்தியிருந்தார் மற்றும் அதன் கிரயம் ரூபா. 319,150. அந்த காலத்தில் எந்தவொரு இயக்குனர் சபையும் அமைக்கப்படவில்லை என்பதால் சபை அனுமதி வழங்க மறுத்துவிட்டது மற்றும் | முன்னாள் தலைவருக்கு வங்கியால் ரூபா. 319,150 இனை திருப்பி செலுத்தும் படி கோரி ஒரு கடிதம் 1 ஜீலை 2020 அன்று அனுப்பப்பட்டது. இன்று வரை முன்னாள் தலைவரிடமிருந்து பதில் பெறப்படவில்லை. மேலும், மேற்கூறிய தொகையை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | மேலும் தாமதமின்றி சபை தீர்மானத்தின் படி செலவை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கூறிய நிலுவைத்தொகையை வசூலிக்க அறிவுறுத்தியது. இருப்பினும், கணக்காய்வு செய்யப்பட்ட திகதியில் மேலே குறிப்பிடப்பட்ட நிலுவைத்தொகையானது வங்கியால் அறவிடப்பட்டிருக்கப்படவில்லை. | | |
| (ii) | 01 அக்டோபர் 2018 தொடக்கம் அமுலுக்கு வரும் முன்னாள் தலைவரின் நியமனம். | | |
| (அ) | ஒரு சாரதியுடன் அலுவலக வாகனம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, மேற்கூறிய இரண்டு வாகனங்களில் ஒன்று சேவைக்கு அல்லது பழுது பார்த்தலுக்கு அனுப்பப்பட்டிருக்கும் போது இன்னொரு வாகனம் சாரதியுடன் தலைவரின் அலுவலகத்திற்கும் மற்றும் மேலும் இரண்டு வாகனங்களும் வழங்கப்பட்டது. தலைவர் அக்டோபர் 2018 தொடக்கம் செப்ரெம்பர் 2018 வரை 12 மாத காலப்பகுதிக்காக 8,436.10 லீட்டர் எரிபொருளை பயன்படுத்தியிருந்தார் மற்றும் அதன் கிரயம் ரூபா. 1,115,289 ஆகும். 25 மே 2015 திகதிய பிஈடி 1/2015 இன் பிரிவு 3.1 இன் படி, தலைவருக்கு ஒதுக்கப்பட்ட மாத எரிபொருள் வரையறை 170 லீட்டராக இருக்கிறது. மேற்கூறிய சுற்றறிக்கையின் வரையரைக்கு மேலதிகமாக தலைவர் 6,396.10 லீட்டர் எரிபொருளை பயன்படுத்தியிருக்கிறார். | தலைவருக்கு ஒதுக்கப்பட்ட வாகனம் மற்றும் எரிபொருள் கொடுப்பனவு அகியவற்றுக்கான இயக்குனர் சபையின் அனுமதி வழங்கப்பட்டது மற்றும் பொறுப்பான அமைச்சின் செயலாளரின் அனுமதியும் பெறப்பட்டது. திறைசேரியின் துணை செயலாளர் குறித்த கூட்டத்திற்கு வருகை தந்திருந்தார். 26 நவம்பர் 2019 அன்று நடைபெற்ற கூட்டத்தில் இயக்குனர் சபை தலைவருக்கான மாத எரிபொருளாக 225 லிட்டரை அனுமதியளித்தது. இது மீள்கொடுப்பனவு அடிப்படையில் தங்குமிடத்திலிருந்து வங்கிக்கான அவரின் பயணத்துக்கானதாகும். ஏனைய அனைத்து உத்தியோகபூர்வ பயணங்களுக்கும் வங்கி எரிபொருளை ஒதுக்கீட்டு தேவை அடிப்படையில் வழங்கும். | மேற்கோள் காட்டப்பட்ட வழிகாட்டுதல்களை பின்பற்ற தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும். |
| (ஆ) | சுற்றறிக்கை இல பிஈடி 2/2015 இன் பிரிவு 2 இன் படி, உத்தியோகபூர்வ மற்றும் தங்குமிட தொலைபேசி உட்பட தகுதியான அதிகாரிகளின் அனைத்து தகவல் தொடர்பு கட்டணங்களும் மாதத்திற்கான உட்சபட்ச வரையறை வரை செலுத்தப்படுகின்றன. இருப்பினும், அலுவலக தொலைபேசி கட்டணம் மேற்கூறிய வரையறையிலிருந்து எடுக்கப்பட்டு, ஒத்த வசதிகளை | சுற்றறிக்கை இல பிஈடி 2/2015 இன் படி தொடர்புடைய கட்டண சிட்டைகள் செலுத்தப்பட்டிருந்தன. | |

| | | | |
|---|---|---|---|
| | பெறும் உரித்துடைய தலைவர் மற்றும் ஏனைய அதிகாரிகளுக்கு வங்கி செலவுகளாக செலுத்தப்படுகிறது. மேலும், ஏனைய நபரின் செலுத்தப்பட்டிருந்த தொலைபேசி கட்டணங்கள் தலைவர் சார்பாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |
| (iii) | 15 மே 2019 இல் தலைவரின் வேண்டுகோளின் படி, சவிய கடன் திட்டத்தின் ஒப்பந்தத்துடன் தொடர்புடைய ஜனாதிபதி சட்டத்தரணியிடமிருந்து ரூபா. 490,000 இற்கு சட்ட அபிப்பிராயம் பெற்றுக்கொள்ளப்பட்டது. எவ்வாறாயினும், 10 ஏப்ரல் 2019 அன்று வயம்ப அபிவிருத்தி மற்றும் புத்தசாசன அமைச்சு ஊடாக சட்டத்தரணி பணிப்பாளரின் ஒரு அபிப்பிராயத்தின் நகல் ஏற்கனவே கிடைக்கப்பெற்றது மற்றும் ஒரு சட்ட ஆலோசகரும் கூட வங்கியிடம் கிடைக்கக்கூடியதாக இருக்கின்றது. அவசியமான எல்லா ஆவணங்களும் ஜனாதிபதி சட்டத்தரணிக்கு சமர்ப்பிக்கப்படாமை காரணமாக, கொடுக்கப்பட்ட அபிப்பிராயமானது கணிப்பிடப்படும் எடுகோள்கள் மற்றும் சில அவதானிப்புக்களுடன் தொடர்புடையதாக இருந்தது. எனவே, அதிக செலவில் மேலதிக சட்ட அபிப்பிராயத்தை பெறுவது கணக்காய்வில் கேள்வியாக இருக்கின்றது. | இந்த அபிப்பிராயத்தை கருத்தில் கொள்கையில், வங்கி மற்றும் அதன் அதிகாரிகளுக்கு எதிராக பாதகமான கருத்துக்கள் இன்னும் காணப்படுகின்றன. வங்கி மற்றும் அதன் அதிகாரிகளால் செய்யப்பட்ட தவறுகளை அடையாளம் காண்பதற்காக மற்றும் இந்த நிலைமைக்கு தீர்வு காணும் முறைக்காக சட்ட அபிப்பிராயம் பெறப்பட வேண்டும் என தலைவர் கருதுகிறார். வங்கியின் சட்ட ஆலோசகர் 19 ஏப்ரல் 2019 இலிருந்து ஒரு மாத காலப்பகுதிக்கான வெளிநாட்டு விடுமுறைக்கு அனுமதியளித்தார். துணை வழக்குரைஞர் பணிப்பாளரால் அவருடைய ஒரு கூட்டத்திற்கு வராமைக்கு நீதிமன்ற அழைப்பு விடப்பட்டது. மற்றும் இந்த கூட்டத்திற்கு கூட, இந்த விடயம் தொடர்பாக வங்கி அதிகாரிகள் குற்றம் சாட்டப்பட்டு இருந்தனர். | நிதிகளினை வினைத்திறனாக பயன்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும். |

**3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | **வங்கியின் சம்பள திருத்தங்கள்** | | |
| (அ) | வங்கிக்கும் இலங்கை வங்கி ஊழியர் சங்கத்திற்கும் இடையில் கையெழுத்திடப்பட்ட கூட்டு ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஒவ்வொரு மூன்று வருடங்களுக்கும் வங்கியின் சம்பளம் திருத்தப்படும். 2015 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் | சம்பளம் முன்மொழிவு தொடர்பாக இலங்கை வங்கி ஊழியர் சங்கத்துடன் பல சுற்று விவாதங்கள் நடாத்தப்பட்டன மற்றும் இறுதியாக இயக்குனர் சபை மற்றும் பொறுப்பான அமைச்சின் அனுமதியுடன் | வங்கியின் நிதிகளினை வினைத்திறனாக பயன்படுத்தவும் ஊழியர்களின் செயல்திறனை அதிகரிக்கவும் தேவையான |

| | | | |
|---|---|---|---|
| | நடைபெற்ற இரண்டு சம்பள திருத்தங்களுடன் 2014 ஆம் ஆண்டு முடிவுடன் ஒப்பிடும் போது வங்கியின் ஊழியச்செலவுகள் 31 திசெம்பர் 2019 இல் 97.5 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. | சம்பள திருத்த ஒப்பந்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. | நடவடிக்கைகளை எடுக்கவும். |
| (ஆ) | 01 ஜனவரி 2018 இலிருந்து நடைமுறைக்கு வரும் சம்பள திருத்தத்தில் தரம் I முதல் தொழிலாளர் தரம் 9-I அதிகாரிகளின் மொத்த சம்பளம் மற்றும் சிறப்பு தரம் I முதல் சிறப்பு தரம் IV வரையிலான அதிகாரிகளின் மொத்த சம்பளம் முறையே 14.5 சதவீதத்திலிருந்து 36 சதவீதத்திற்கும் மற்றும் 39.5 சதவீதத்திலிருந்து 50 சதவீதத்திற்கும் அதிகரிப்பதற்கான அனுமதி பொது தொழில் முயற்சிகள் மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது. இதன் விளைவாக, தரம் I முதல் தொழிலாளர் தரம் 9-I அதிகாரிகளின் ஆரம்ப சம்பள நடைமுறைகள் மற்றும் சிறப்பு தரம் I முதல் சிறப்பு தரம் IV வரையிலான அதிகாரிகளின் ஆரம்ப சம்பள நடைமுறைகள் முறையே 34.8 சதவீதத்திலிருந்து 48.9 சதவீதத்திற்கும் மற்றும் 50.4 சதவீதத்திலிருந்து 57.4 சதவீதத்திற்கும் அதிகரித்துள்ளது. இருப்பினும், வங்கியானது மேலதிக நேர கொடுப்பனவுச் செலவு மற்றும் பிஎவைஈ வரி செலவு போன்ற அடிப்படை சம்பளத்தினை அடிப்படையாக கொண்ட செலவுகளின் தாக்கத்தினை கவனத்தில் எடுப்பதில்லை. | சம்பள திருத்தம் 14.5 சதவீதத்திலிருந்து 36 சதவீதம் வரை மொத்த சம்பளத்தின் ஏற்றுக்கொள்ளக்கூடிய சதவீத அதிகரிப்பை அடிப்படையாக கொண்டு மேற்கொள்ளப்பட்டது. இது ஏனைய அரச வங்கிகளுடன் இணையாக இருந்தது. அதே நேரத்தில் பிரதேச அபிவிருத்தி வங்கியின் சம்பள அளவுகள், எல்லா தரங்களுடன் தொடர்புடையவை அரச வங்கிகளுக்கு சமமாக மீள் திருத்தப்பட்டன. சம்பள அதிகரிப்பினை பகுப்பாய்வு செய்யும் போது ஈபிஎவ் மற்றும் ஈரிஎவ் செலவுகளை உள்ளடக்கிய மொத்த சம்பள கிரயம் கவனத்தில் எடுக்கப்பட்டது. மேலதிக நேர கொடுப்பனவுச் செலவு நிலையான செலவாக கருத்தில் கொள்ளப் முடியாது மற்றும் அது ஊழியர் கோரிக்கையினைப் பொறுத்து வேறுபடும். | |
| (இ) | ஏனைய அரச வங்கிகளுக்கு சமமாக வங்கியின் சம்பள அமைப்பு 2019 ஆம் ஆண்டில் சபையின் அனுமதியுடன் செயல்படுத்தப்பட்டது மற்றும் அதன்படி ஊழியர்களின் அடிப்படைச்சம்பளம் 3.5 சதவீதத்திலிருந்து 13.4 சதவீதத்திற்கு அதிகரித்துள்ளது. | இயக்குனர் சபை அனுமதியுடன் அரச வங்கிகளுக்கு சமமாக பொது முகாமையாளரின் சம்பள உயர்வு அதிகரிக்கப்பட்டுள்ளது. | |

ஊழியர்களின் சம்பள உயர்வு வீதம் கூட 2.9 சதவீதத்திலிருந்து 52.9 சதவீதம் வரை அதிகரித்துள்ளது மற்றும் 2019 இற்கான மீள் திருத்தப்பட்ட சம்பள அளவுகளில் பொது முகாமையாளரின் சம்பள உயர்வு வீதம் 265.6 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது

(ஈ) சபை ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களின் படி, பிரதேச அபிவிருத்தி வங்கியின் சம்பள திருத்தத்தினை தீர்மானிப்பதில் ஏனைய அரச வங்கிகளின் சம்பள திருத்தம் கவனத்தில் எடுக்கப்பட்டன. இருப்பினும், அந்த வங்கிகளின் நடைமுறையிலுள்ள சம்பள திருத்தங்களை ஆர்டிபி உடன் நேரடியாக ஒப்பிட முடியாது. ஏனெனில் சொத்து அடிப்படை, இலாப நிலைகள், ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் கிளைகளின் எண்ணிக்கை என்பன ஒரே மாதிரியாக இருக்காது. வங்கிக்கு ஆண்டுக்கு ஒரு ஊழியருக்கு ரூபா. 2.17 மில்லியன் செலவு ஏற்பட்டிருந்தாலும் ஒரு ஊழியருக்கு 2019 ஆம் ஆண்டில் ரூபா. 0.18 மில்லியன் மட்டுமே இலாபமாக உழைக்கப்பட்டிருந்தது அவதானிக்கப்பட்டது. மேலும், 2019 ஆம் ஆண்டில் ஊழியர் செலவுகள் வங்கியின் தேறிய செயற்பாட்டு வருமானத்தின் 54 சதவீதமாக இருந்தது மற்றும் ஏனைய அரச வங்கிகளிடையே உயர்ந்த பெறுமதியினை பிரதிபலித்தது.

இலங்கை வங்கி ஊழியர் சங்கத்துடனான அங்கீகரிக்கப்பட்ட கூட்டு ஒப்பந்தத்தின் படி, அனைத்து தரங்களுடனும் தொடர்புடைய ஆர்டிபி இன் ஊழியர்களின் சம்பள அளவுகள் 2019 ஜனவரி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அரச வங்கிகளுடன் சமமாக திருத்தப்பட்டன.

(உ) சிறப்பு ஊதிய வெகுமதியில் முன்னாள் பொது முகாமையாளர் ஆட்சேர்க்கப்பட்டு, சம்பளம் 01 ஜனவரி 2018 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் உழைக்கப்பட்ட சம்பள உயர்வுடன் 50 சதவீத சம்பள அதிகரிப்பு அடிப்படையில் ரூபா. 435,000 இலிருந்து ரூபா. 763,425 ஆக அதிகரித்துள்ளது. பொது தொழில் முயற்சிகள் மற்றும் கண்டி நகர அபிவிருத்தி

இயக்குனர் சபை அனுமதியுடன் முன்னாள் பொது முகாமையாளரின் சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| | அமைச்சின் செயலாளரின் அனுமதியுடன் மேற்கூறிய தீர்மானம் சபையால் அங்கீகரிக்கப்பட்டது. இருப்பினும், அமைச்சிடமிருந்து அந்த அனுமதி கணக்காய்விற்கு கிடைக்கக் கூடியதாகவில்லை. | | |
| (ii) | பொது முகாமையாளர் நியமனம் | | |
| (அ) | தேர்தல் காலப்பகுதியில் நியமனங்கள் தடைசெய்யப்பட்டிருக்கின்றது என்பதால் பொது முகாமையாளர் ஆட்சேர்ப்புச்செயன்முறை மற்றும் அட்டவணைப்படுத்தப்பட்ட நேர்முகத் தேர்வினை தொடரவும் தலைவரால் தேர்தல் ஆணையாளரிடம் கோரிக்கை செய்யப்பட்டுள்ளது. பதிலின் அடிப்படையில், நிறுத்தி வைக்கப்பட்ட அட்டவணைப்படுத்தப்பட்ட நேர்முகத் தேர்வினை நடத்த ஆட்சேபனை இல்லை என தேர்தல் ஆணையாளர் அறிவித்திருந்தார். இந்த கடிதத்தினை கருத்தில் கொள்ளும் போது, ஆட்சேர்ப்புக்கான ஒரு அனுமதி 01 நவம்பர் 2019 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் பொது முகாமையாளர் நியமனமிக்கப்பட்டிருந்தார். | வங்கியால் ஜிஎம்/சிஈஓ இன் ஆட்சேர்ப்பினை தொடருவதற்கான அனுமதியினை கோரி ஒரு கடிதம் அனுப்பப்பட்டது. இது நேர்முகத் தேர்வினை நடாத்துதலுடன் ஆரம்பித்து, பொருத்தமான ஒரு விண்ணப்பதாரரை தெரிவு செய்தல் மற்றும் நியமித்தல் என முழுமையான செயன்முறையினை உள்ளடக்குகின்றது. தேர்தல் ஆணையாளரினால் அனுப்பப்பட்ட கடிதத்தின் பதிலின் தலைப்பில் குறிப்பிடப்பட்டதன் படி, ‘ஆர்டிபி இன் ஜிஎம்/சிஈஓ பதவிக்கான ஆட்சேர்ப்பு’ என்பது ஆட்சேர்ப்புக்கான யோசனை திட்டத்தினை தருகின்றது. எனவே, இந்த கடிதத்தினை நேர்முகத் தேர்விற்கான மற்றும் ஆட்சேர்ப்புக்கான அனுமதியாக கருத முடியும். | நடைமுறையில் உள்ள விதிமுறைகளை பின்பற்ற தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும். |
| (ஆ) | 27 பெப்ரவரி 2017 திகதியிட்ட சுற்றறிக்கை இல 2017/92 மூலம் தொடர்பு படுத்தப்பட்ட தொடர்ச்சியான திட்டமிடல் கொள்கையின் படி, வங்கியின் மூத்த நிர்வாக நிலை, உதவி பொது முகாமையாளர் மற்றும் அதற்கு மேற்பட்ட நிலை என வரையறுக்கின்றது. இருப்பினும், சட்ட ஆணையாளர்கள் திணைக்களம் கருத்துப்படி, சபை முகாமைத்துவ கட்டமைப்பு, மூலதனம் மற்றும் தற்போதைய நிறுவனத்தின் ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் முன்னைய வேலை வாய்ப்புக்கள் என்பவற்றை கருத்தில் | ஜிஎம்/சிஈஓ பதவிக்கான ஆட்சேர்ப்பு வெளிவாரியாக செய்யப்பட்டது. வங்கியின் உள்ளக தொடர்ச்சியான திட்டமிடல் கொள்கை மேற்கூறிய நேர்முகத் தேர்விற்கு பயன்படுத்தப்பட முடியாது. மேலும், பிஎஸ்பி சட்டத்தின் படி, பொது முகாமையாளர் மூத்த நிர்வாக நிலையில் வங்கியில் பத்து வருட அனுபவத்தினை கொண்ட தனிநபராக இருக்க வேண்டும். | எந்தவொரு பதவிக்கும் விண்ணப்பங்களை அழைத்தபின் வங்கியின் தற்போதைய சுற்றறிக்கைகளில் செய்யப்படும் திருத்தங்கள், தெரிவு செயல்முறையின் வெளிப்படைத் தன்மை குறித்து சந்தேகத்தை உருவாக்கலாம். எனவே, தெரிவு செய்யும் |

| | | | |
|---|---|---|---|
| | கொள்ளும். இதன்படி, மேற்கூறிய சுற்றறிக்கைக்கு முரணாக சபை மேற்கூறிய பதவிக்காக விண்ணப்பங்கள் அழைக்கப்பட்டதன் பின்னர் பிரதான முகாமையாளர் பதவிக்கு சிரேஸ்ட முகாமைத்துவ அனுபவத்தினை கருத்தில் கொண்டது. | | முறைகளினை அடிக்கடி மாற்றாமல் தெரிவு செயல்முறையின் வெளிப்படைத் தன்மையினை பேண தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும். |
| (இ) | சில விண்ணப்பதாரர்களின் சிரேஸ்ட முகாமைத்துவ அனுபவத்திற்கான புள்ளிகள் நேர்முகத் தேர்வில் வழங்கப்பட்டிருக்கவில்லை அல்லது வருடாந்த அறிக்கைகள் அல்லது வலைத்தளத்தில் தகவல்களின் கிடைப்பனவு இன்மை காரணமாக சில விண்ணப்பதாரர்கள் நிராகரிக்கப்பட்டனர். இருப்பினும், தொடர்புடைய நிறுவனங்களிலிருந்து குறுகிய பட்டியலில் சேர்க்கப்பட்ட விண்ணப்பதாரர்களின் அனுபவத்தினை வங்கி உறுதிப்படுத்தியிருக்க வேண்டும். | பிரச்சினைகள் உள்ள விண்ணப்பதாரர்கள் தொடர்பாக அந்தந்த நிறுவனங்களின் கடைசி சேவை ஆண்டின் வருடாந்த அறிக்கையினை சேகரிக்க எச்ஆர் பிரிவுக்கு சபை அறிவித்தது. வருடாந்த அறிக்கை மற்றும் வலைத்தளம் நம்பகமான தகவல்களின் மூலமாகவும் மற்றும் சட்ட ரீதியாக சரி பார்க்கப்பட்டதாகவும் கருதப்படலாம். மேலும், வருடாந்த அறிக்கை மற்றும் வலைத்தளங்கள் சொந்தமானவையாகவும் மற்றும் குறித்த நிறுவனங்களால் உருவாக்கப்பட்டும் இருக்கின்றன. அதன்படி, எச்ஆர் பிரிவால் அனுபவத்தினை உறுதிப்படுத்துவது செய்யப்பட வேண்டும், மற்றும், அது சபை செயலாளரின் கீழ் வராது. எச்ஆர் பிரிவால் சமர்ப்பிக்கப்பட்ட கிடைக்கத்தக்க தகவல்களின் படி, விண்ணப்பதாரர்கள் குறுகிய பட்டியலில் சேர்க்கப்பட்டனர். | . |
| (ஈ) | 08 ஆகஸ்ட் 2016 திகதிய சபை எச்ஆர் ஆவண இல 2016/03/03 இன் கூட்ட அறிக்கையின் படி, உதவி பொது முகாமையாளர் தரம் மற்றும் அதற்கு மேற்பட்ட தரத்திற்கான புள்ளித்திட்டமானது, 40 புள்ளிகள் நேர்முகத் தேர்வுக்கும் மற்றும் மீதி 60 புள்ளிகள் பொருத்தமான தகமைகள் மற்றும் அனுபவத்திற்கும் என மாற்றப்பட்டுள்ளது, இருப்பினும், | ஜிஎம்/சிஈஓ பதவிக்கான ஆட்சேர்ப்பு வெளிவாரியாக செய்யப்பட்டதனால், ஏஜிஎம் தரம் மற்றும் அதற்கு மேற்பட்ட தரத்திற்காக பயன்படுத்தப்பட்ட உள்ளக புள்ளித்திட்டத்தினை ஜிஎம்/சிஈஓ நேர்காணலுக்கு பயன்படுத்த முடியாது என்றும், அதன்படி, ஒரு நிறுவனத்தின் ஜிஎம்/சிஈஓ | |

| | |
|---|---|
| மேற்கூறிய புள்ளித்திட்டமானது, 60 புள்ளிகள் நேர்முகத் தேர்வுக்கும் மற்றும் நேர்முகத் தேர்வுக்குக்காக 8 பரீட்சாத்திகள் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் 40 புள்ளிகள் தகமைகளுக்கும் என சபையால் மாற்றப்பட்டுள்ளது. மேலும், தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு நேர்முகத் தேர்வில் உயர்ந்த புள்ளிகள் வழங்கப்பட்டிருந்தன. அதே நேரம் ஏனையவர்களுக்கு 28.33 புள்ளிகளிலிருந்து 32.83 புள்ளிகள் மட்டுமே வரை வழங்கப்பட்டிருந்தன. | பதவிகளின் முழுமையான பொறுப்புக்களை கவனத்தில் கொள்கையில், புள்ளித்திட்டம் மாற்றப்பட்டுள்ளது என்றும் சபை கருதியது. மேலும், நேர்முகத் தேர்வு, முன்வைப்பு திறன்கள் மற்றும் ஏனைய செயற்பாடுகளினை அடிப்படையாக கொண்டு நேர்காணலுக்கான புள்ளிகள் வழங்கப்பட்டிருந்தது. எனவே, நேர்முகத் தேர்வு குழுவினால் ஒவ்வொரு விண்ணப்பதாரர்களுக்கும் வெவ்வேறு புள்ளிகள் வழங்கப்பட்டது. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வங்கியின் தற்போதைய கூட்டிணைந்த திட்டம் 2016 முதல் 2020 வரை 5 ஆண்டுகளுக்கு மட்டுமே தயாரிக்கப்பட்டது. அதற்குப்பிறகு வங்கியால் புதுப்பிக்கப்படவில்லை. | அடுத்த 3 வருடங்களுக்கான கூட்டிணைந்த திட்டத்தை தயாரிக்க எற்பாடுகள் செய்யப்பட்டிடுக்கின்றன. அது எதிர்காலத்தில் ஒவ்வொரு முடிவடையும் வருடத்திற்கும் புதுப்பிக்க முன்மொழியப்படும். | கூட்டிணைந்த திட்டத்தை எந்த தாமதமும் இன்றி தயாரிக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும். |